# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை **திருமதி C.கலைவாணி, பி.ஏ., எல்.எல்.பி,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

திருவள்ளுவராண்டு 2052, ஸ்ரீ பிலவ வருடம் மாசித் திங்கள் 02 ஆம் நாள்

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 ஆம் நாள் திங்கள் கிழமை

**அசல் வழக்கு எண்.45/2020**

(CNR No.TNTV0-000057-2020)

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு இலாக்கா மற்றும் தாலுக்கா , மன்னார்குடி டவுன், சங்குதீர்த்தம் கீழ்கரை, கதவிலக்கம் 7 என்ற முகவரியில் வசித்து வரும் நடராஜன் மகள் இந்து சிவமதம், 51 வயதுள்ள சித்ரா

... வாதி

/எதிர்/

01. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு இலாக்கா மற்றும் தாலுக்கா, மன்னார்குடி டவுன், புதிய வீட்டு வசதி வாரியம், கதவிலக்கம் 3/103 என்ற முகவரியில் வசித்து வரும் அன்னையா நாயுடு, குமாரர், இந்து, சிவமதம், 65 வயதுள்ள நெப்போலியன்.

02. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு இலாக்கா மற்றும் தாலுக்கா, மன்னார்குடி டவுன், ராமையா நகர், கோபிரளயம் ரோடு, கதவிலக்கம் 10/1 என்ற முகவரியில் வசித்து வரும் நெப்போலியன் குமாரர், இந்து, சிவமதம், 40 வயதுள்ள N. சரவணன்.

03. தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை டி.மு. இலாக்கா, மதுக்கூர் தாலுக்கா, தென்பாதி கிராமம், மேலசூரியதோட்டம், கதவிலக்கம் 21/A என்ற முகவரியில் வசித்து வரும் சின்னையன் சோழகர் குமாரர், இந்து, சிவமதம், 43 வயதுள்ள C. சரவணன்.

04. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு இலாக்கா மற்றும் தாலுக்கா, மன்னார்குடி டவுன், பழைய தஞ்சாவூர் ரஸ்தா, கதவிலக்கம் 19/1 என்ற முகவரியில் வசித்து வரும் சின்னக்கண்ணு குமாரர், இந்து, சிவமதம், 47 வயதுள்ள முருகானந்தம்

05 திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி டவுனில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகம் அதற்காக அதன் சார் பதிவாளர்.

06 நாகப்பட்டினம் மாவட்டம, நாகப்பட்டினம் தாலுக்கா, நாகப்பட்டினம் டவுனில் இயங்கி வரும் மாவட்ட பதிவாளர் அலுவலகம் அதற்காக அதன் மாவட்ட பதிவாளர்.

07 திருவாரூர் மாவட்டம, திருவாரூர் தாலுக்கா, திருவாரூர் டவுனில் இயங்கி வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அதற்காக அதன் மாவட்ட ஆட்சியர்.

- பிரதிவாதிகள்

வாதிக்கு சொந்தமான தாவா சொத்தை மோசடியான ஆவண அடிப்படையில் 4-வது பிதிவாதி பேரிலோ அல்லது வேறு நபர் பெயரிலோ 02.06.2020 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை அனுசரித்து 5-வது பிரதிவாதி எவ்வித கிரய ஆவணமும் பதிவு செய்யக்கூடாது என தீர்ப்பு செய்தும், தாவா சொத்தை உட்படுத்தி ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட், பத்திரம் 31.12.2018 செல்லத்தக்கத்தல்ல (Null and Void) என தீர்ப்பு செய்தும், தாவா சொத்தை உட்படுத்தி ஏற்படுத்தப்பட்ட கிரய ஒப்பந்தப்பத்திரம் 02.06.2020 செல்லத்தக்கத்தல்ல (Null and Void) என தீர்ப்புசெய்தும், அதனை அனுசரித்து மேற்படி ஆவணங்களை 5ம் பிரதிவாதி அலுவலகத்தில் ரத்து செய்ய செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், தாவா சொத்தில் வாதிக்குள்ள அமைதியான அனுபவத்தை 1, 2, 3 பிரதிவாதிகள் அத்துமீறி பிரவேசித்து இடையூறு செய்யாமலிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் மற்றும் செலவுத் தொகைக்காவும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் 13.07.2020

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டடு நாள் 13.07.2020

இவ்வழக்கின் வழக்கெழு மூலம் 01.09.2003, 31.12.2018, 04.05.2020 மற்றும் 02.06.2020 ஆகிய தேதிகளில் சமூகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி நகரத்தில் உற்பத்தி.

**பொறுமான விபரம்**

தாவா சொத்திற்கு முத்திரை கட்டணம் மற்றும் பொறுமான மதிப்பு ரூ.12,000/- அதற்கு தமிழ்நாடு முத்திரை கட்டண சட்டப்பிரிவு 25(d) மற்றும் 27(c)-ன் கீழ் ரூ.360/- முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| செட்டில்மெண்ட் பத்திரம் 31.12.2018 சட்டப்படி செல்லத்தக்கதல்ல (Null and Void) என்ற பரிகாரத்திற்காக வாதியின் பொறுமானம் | ரூ.5000/- | |
| முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 25(d)-ன்படி | | ரூ.150/- |
| கிரய ஒப்பந்தம் 02.06.2020 சட்டப்படி செல்லத்தக்கதல்ல (Null and Void) என்ற பரிகாரத்திற்காக வாதியின் பொறுமானம | ரூ.5000/- | |
| முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 25(d)-ன்படி ரூ.150/- | | ரூ.150/- |
| கிரய ஒப்பந்தத்தை அனுசரித்து 4-வது பிரதிவாதி பெயரில் 5-வது பிரதிவாதி எவ்வித பத்திர பதிவும் ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக வாதியின் பொறுமானம | ரூ.1000/- | |
| முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 27(c)-ன்படி | | ரூ.30/- |
| வாதியின் அனுபவத்தில் 1, 2, 3 பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு வாதியின் பொறுமானம் | ரூ.1000/- | |
| முத்திரை கட்டணம் சட்டப்பிரிவு 27(c)-ன்படி | | ரூ.30/- |
| ஆகக் கூடுதல் | ரூ.12000/- | ரூ.360/- |

கூடுதல் பொறுமானம் ரூ.12000/-

கூடுதல் முத்திரை கட்டணம் ரூ.360/-

இவ்வழக்கு இன்று என் முன்பாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S. இராமகிருஷ்ணன் அவர்களும், 1, 2, 5 முதல் 7 பிரதிவாதிகள் அழைத்தும் வருகையில்லாததால் ஒரு தலைபட்சமாக்கப்பட்டும், 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. விஜயன் அவர்களும் முன்னிலையான நிலையில், வாதியை அழைத்தும் ஆஜராகாததால் வாதியின் தவறுகைக்காக இன்று (14.02.2022) இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

1. வழக்கு வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2. செலவுத் தொகை இல்லை.

2022ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

C KALAIVANI

Digitally signed by C KALAIVANI
DN: cn=C KALAIVANI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

## சொத்து விவரம்

நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார்பதிவகம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி நகரம், சங்கு தீர்த்தம் கீழ்கரையில்,

வார்டு எண்.1, பிளாக் எண்.21, பழைய நகரளவை எண்.1395, புதிய நகரளவை எண்.1395/4-ல் 1918 ச.அடி மனையும் அதில் உள்ள பழைய கதவிலக்கம் 7, புதிய கதவிலக்கம் 10 கொண்ட கூரைவீடு அதன் மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு, தென்னை மரம் 3 உள்படவும்,

**நான்கெல்லை விபரம் :**

சுந்தரத்தம்மாள் வீடு மனைக்கு கிழக்கு, சங்கு தீர்த்தம் கீழ்கரைக்கு மேற்கு, வளர்மதி வீடு மனைக்கு தெற்கு, குணசேகரன் வீடு மனைக்கு வடக்கு இதற்குள்பட்டது.

## செட்டில்மெண்ட் சொத்து விவரம்

நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார்பதிவகம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி நகரம், சங்கு தீர்த்தம் கீழ்கரையில்,

வார்டு எண்.1, பிளாக் எண்.21, பழைய டவுன் சர்வே எண்.1396-க்கு TSLR படி புதிய சர்வே எண்.1396/2-ல் மனை பூரா 2718 சதுரடியில் பகுதி 862 சதுரடி மட்டும். அடிமனையும் அதிலுள்ள மண்சுவர் கூரைவீடும், அதிலுள்ள மின்னிணைப்பு. மின்காப்பீட்டுத்தொகை, நகராட்சி குடிநீர் குழாய் இணைப்பு அதன் டெபாசிட் தொகை உட்படவும், மேற்படி வீட்டின் பழைய கதவிலக்கம் 7, புதிய கதவிலக்கம் 10.

**நான்கெல்லை விபரம் :**

சுந்தரத்தம்மாள் மனைக்கு கிழக்கு, ரோட்டிற்கு மேற்கு, மோகன், வளர்மதி ஆகியோர் மனைக்கு தெற்கு, நெப்போலியன் பாக்கியுள்ள மனைக்கும் வடக்கு இதற்குள்பட்டது.

C KALAIVANI

Digitally signed by C KALAIVANI
DN: cn=C KALAIVANI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

Valuation Slip

IN THE COURT OF DISTRICT MUNSIF OF MANNARGUDI

O.S.No. 45/2020

சித்ரா ... வாதி

/எதிர்/

01. நெப்போலியன்
02. N. சரவணன்
03. C. சரவணன்
04. முருகானந்தம்
05. சார்பதிவாளர், மன்னார்குடி
06. மாவட்ட பதிவாளர், நாகப்பட்டினம்
07. மாவட்ட ஆட்சியர், திருவாரூர் ... பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| Section | : | Sec. 25(d) T.N.C.F. Act<br>Sec. 27(c) T.N.C.F. Act |
| Nature of Suit | : | Declaration,<br>Permanent Injunction |
| valuation of the Suit | : | Rs.5000 + Rs.5000+ Rs.1000 + Rs.1000<br>= Rs.12000/- |
| Court Fees | : | Rs.150 + Rs.150 + Rs.30 + Rs30<br>= Rs. 360/- |

//By Order//

Head Clerk
District Munsif Court,
Mannargudi.